ஜுலை 24-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

First Published : 19 Jul 2012 11:28:22 AM IST

திருவள்ளூர், ஜுலை 18: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் வரும் 24-ம் தேதி காலை 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில நடைபெறவுள்ளது.

மாவட்ட ஆட்சியர் ஆசிஷ் சாட்டர்ஜி தலைமையில் இக்கூட்டம் நடைபெறுகிறது. வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணித்துறை, மீன்வளம், வேளாண் விற்பனைத் துறை போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று விவசாயிகளின் குறைகளுக்கு பதில் அளிக்கின்றனர்.

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் குறைகளைத் தெரிவிக்கலாம்.

கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்

First Published : 19 Jul 2012 12:35:05 PM IST

திருவாரூர், ஜுலை 18: திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியம், செம்மங்குடி ஊராட்சியில் திங்கள்கிழமை கால்நடை சிறப்பு பாதுகாப்புத் திட்ட முகாம் நடைபெற்றது.

முகாமை மாவட்ட ஆட்சியர் சி. நடராசன் தொடக்கி வைத்தார். முகாமில் 235 கால்நடைகளுக்கு சினைப் பரிசோதனை, 30 ஆடுகளுக்கு கருவூட்டல், 225 கால்நடைகளுக்கு மலடு நீக்கச் சிகிச்சை, 510 கால்நடைகளுக்கு இலவசத் தடுப்பூசி, 425 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், 28 கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்யப்பட்டது. தவிர சிறந்த கால்நடை வளர்ப்பவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

முகாமில் கொரடாச்சேரி ஒன்றியக் குழுத் தலைவர் மு. அறிவழகன், துணைத் தலைவர் சேசுராசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

## சென்ற 2011-12ம் நிதி ஆண்டில்... பாசுமதி அரிசி ஏற்றுமதி 32 லட்சம் டன்னாக அதிகரிப்பு

ஜூலை 20,2012,01:12



புதுடில்லி:கடந்த 2011-12ம் நிதியாண்டில், நாட்டின் பாசுமதி அரிசி ஏற்றுமதி, 32.10 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. முந்தைய நிதியாண்டில், இதன் ஏற்றுமதி, 21.80 லட்சம் டன்னாக இருந்தது என, வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (அபிடா) தெரிவித்துள்ளது.சர்வதேச அளவில், அரிசி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவிற்கு உள்ளது. சென்ற நிதியாண்டில், இந்திய பாசுமதி அரிசி ஏற்றுமதிக்கு, பாரம்பரிய சந்தைகளாக திகழும் மேற்காசிய நாடுகளில், இதற்கான தேவை சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது.

ரூபாய் மதிப்பு:சென்ற நிதியாண்டில், பாசுமதி அரிசி ஏற்றுமதி, ரூபாய் மதிப்பின் அடிப்படையில் 46 சதவீதம் வளர்ச்சி கண்டு, 12,450 கோடியிலிருந்து, 16,100 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. டாலர் மதிப்பின் அடிப்படையில் இதன் ஏற்றுமதி, 29 சதவீதம் வளர்ச்சி கண்டு,249 கோடி டாலரிலிருந்து,322 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாயின் வெளி மதிப்பில் ஏற்பட்ட மாறுபாடுகளால்,டாலர் மதிப்பிலான ஏற்றுமதி வருவாய் சற்றே அதிகரித்துள்ளது."தற்போது, இந்தியாவிலிருந்து,மாதம் ஒன்றுக்கு மூன்று லட்சம் டன் என்றளவில் பாசுமதி அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிறது' என,பாசுமதி அரிசியை அதிகளவில் ஏற்றுமதி செய்து வரும் முன்னணி நிறுவனத் தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**கட்டுப்பாடு நீக்கம்:**மத்திய அரசு, பாசுமதி அரிசி ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில், அதன்

மீதான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை நீக்கியது. இதனால் இதன் ஏற்றுமதி அதிகரித்துள்ளது.மேலும், ஈரான் நாடும் இந்திய பாசுமதி அரிசியை அதிக அளவில் இறக்குமதி செய்து வருகிறது.கடந்த 2008-09ம் ஆண்டில்,15.50 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி மூலம்,9,447 கோடி ரூபாய் வருவாய் கிடைத்தது.2009-10ம் ஆண்டில், 10,889 கோடி ரூபாய் மதிப்பிற்கு 20.10 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது. 2010-11ம் ஆண்டில், 21.80 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி மூலம் 10,578 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டது. இதனிடையே, இந்திய பாசுமதி அரிசி இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட தடையை சீனா நீக்கியுள்ளதும், அதன் ஏற்றுமதி அதிகரிக்க வழிவகுத்துள்ளது. இருப்பினும், கணக்கீட்டு ஆண்டுகளில், டாலர் மதிப்பில் ஏற்பட்ட, ஏற்ற, தாழ்வுகளால் ஏற்றுமதி வருவாய் மதிப்பு சற்று குறைந்துள்ளது.

**ஏற்றுமதிக்கு அனுமதி:**சென்ற நிதியாண்டில், நாட்டின் மொத்த பாசுமதி அரிசி ஏற்றுமதியில், ஈரான், ஐக்கிய அரபு நாடுகள், சவுதி அரேபியா ஆகிய நாடுகளின் பங்களிப்பு மிகவும் அதிகமாக உள்ளது.சென்ற நிதியாண்டில், பாசுமதி சாராத இதர வகை அரிசி ஏற்றுமதி, 50 லட்சம் டன்னை தாண்டியுள்ளது.உள்நாட்டில், நெல் உற்பத்தி சிறப்பாக வளர்ச்சி கண்டதை அடுத்து, மத்திய அரசு, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம், பாசுமதி அல்லாத சாதாரண வகை அரிசி ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கியது.

சென்ற வேளாண் பருவத்தில், உள்நாட்டில், 10.20 கோடி டன் நெல் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இதன் உற்பத்தி, இலக்கை தாண்டி, 10.43 கோடி டன்னாக அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஆப்ரிக் காவை சேர்ந்த நைஜீரியா மற்றும் கானா நாடுகள், இந்தியாவின் சாதாரண வகை அரிசி ஏற்றுமதிக்கு முக்கிய சந்தை களாக திகழ்கின்றன. சென்ற நிதியாண்டில், பாசுமதி மற்றும் சாதாரண அரிசி வகைகளின் ஒட்டுமொத்த ஏற்றுமதி, 73 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.

வட மாநிலங்களில், பருவ மழை தாமதமானதால், பாசுமதி சாராத இதர நெல் வகைகள் குறைந்த அளவிலேயே பயிரிடப்பட்டுள்ளன. பெரும்பாலான பகுதிகளில் விதைப்பு காலம் முடிவடைந்து விட்டது. எனினும், வரும் ஆகஸ்ட் 10ம் தேதி வரை நடவுப் பணிகள் நடைபெறும் என்பதால், விவசாயிகள், லாபம் தரும் பாசுமதி நெல் வகைகளுக்கு மாறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், பாசுமதி நெல் பயிரிடும் பரப்பளவும் கணிசமாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பஞ்சாப்:பாசுமதி அரிசி விலை,சென்ற ஆண்டை விட, நடப்பாண்டில் 60 சதவீதம் அதிகரித்துள்ளது. இதன் காரண மாகவும், பல விவசாயிகள் பாசுமதி நெல் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதன் விளைவாக, நடப்பு நிதியாண்டில், பாசுமதி அரிசி உற்பத்தியும், ஏற்றுமதியும் சிறப்பான அளவில் வளர்ச்சி காணும் என மதிப்பிடப் பட்டுள்ளது.கடந்த ஆண்டு, பஞ்சாப், ஹரியானா மற்றும் உத்தர பிரதேச மாநிலங்களில், 15.50 லட்சம் ஹெக்டேரில், பாசுமதி அரிசி பயிரிடப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## விலை குறைந்ததால் டன் கணக்கில் உப்பு தேக்கம்

ஜூலை 20,2012,00:24



கீழக்கரை:உப்பு விலை சரிவால், ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி பகுதியில் ஆயிரக்கணக்கான டன் உப்பு தேங்கி உள்ளது.திருப்புல்லாணி, காஞ்சிரங்குடி பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் உப்பளங்கள் உள்ளன. நடப்பாண்டில் கடும் வெயில் மற்றும் பலத்த காற்று காரணமாக உப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது. அதனால் அதன் விலை குறைந்து, டன் கணக்கில் உப்பு தேக்கமடைந்துள்ளது.

இது குறித்து, உப்பள மேற்பார்வையாளர் வேலுசாமி கூறியதாவது:கடந்தாண்டு, ஒரு டன் உப்பு, 900 ரூபாய் வரை விற்பனையானது. தற்போது 700 ரூபாயாக குறைந்துள்ளது. மின் கட்டணம் உயர்வு, தொழிலாளர் சம்பளம் அதிகரிப்பு போன்ற கூடுதல் செலவுகளால் பாதிக்கப்பட்டுள்ளோம். மழை காலத்தில், இதன் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

உப்பளத்திற்கு சலுகை கட்டணத்தில் மின்சாரம் வழங்கி, "கரைந்து' வரும் உப்பளத் தொழிலையும், அதை நம்பியுள்ள தொழிலாளர்களையும் மத்திய, மாநில அரசுகள் காப்பாற்ற வேண்டும்.

இவ்வாறு வேலுசாமி தெரிவித்தார்.

## 2011-12-ம் ஆண்டில் பாசுமதி அரிசி ஏற்றுமதி 3.21 மில்லியன் டன்

ஜூலை 19,2012,14:48



புதுடில்லி : மேற்கு ஆசியாவில் பாசுமதி அரிசிக்கு அதிக தேவை ஏற்பட்டதால் கடந்த 2011-12-ம் ஆண்டில் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பாசுமதி அரிசியின் சதவீதம் 45 சதவீதம் உயர்ந்துள்ளது. கடந்தாண்டு 2.18 மில்லியன் டன் அளவில் இருந்த ஏற்றுமதி 2011-12ம் ஆண்டில் 3.21 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது. இதனை மதிப்பீட்டில் சொல்லும் போது ரூ.10 ஆயிரத்து 578 கோடியிலிருந்து 15 ஆயிரத்து 450 கோடியாக, அதாவது 46 சதவீதம் உயர்ந்து இருக்கிறது.

## விலையை உயர்த்தியதால் லாபத்துக்கு திரும்பும் பால் கூட்டுறவு சங்கங்கள்

ஜூலை 19,2012,14:00



பால் விலை உயர்வுக்குப் பின், நஷ்டத்தில் இயங்கி வந்த பால் கூட்டுறவு சங்கங்கள், லாபத்தில் இயங்கத் துவங்கி உள்ளன. இதன்மூலம், கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட நஷ்டத்தை குறைக்கும் நடவடிக்கையை, சங்கங்கள் எடுத்துவருகின்றன.

தமிழகத்தில் உள்ள நான்கு லட்சம் உறுப்பினர்களிடம் இருந்து, நாளொன்றுக்கு, 26 லட்சம் லிட்டர் பாலை, ஒன்பதாயிரம் கூட்டுறவு சங்கங்கள் கொள்முதல் செய்கின்றன. உள்ளூர் தேவை போக, மீதமிருக்கும் பாலை, மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு அளிக்கின்றன.ஒன்றியங்கள், தங்களின் உள்ளூர் தேவைக்குப் போக, மீதமிருக்கும் பாலை, மாநில கூட்டுறவு இணையத்துக்கு அனுப்புகின்றன. மாநில பால் கூட்டுறவு இணையம் மட்டும், நாளொன்றுக்கு, 10 லட்சம் லிட்டர் பாலை கையாள்கிறது. சென்னையின் பால் தேவையில் பெரும் பகுதியை, கூட்டுறவு இணையம் தான் பூர்த்தி செய்கிறது.ரூ.412 கோடி நஷ்டம்கடந்த ஆண்டுகளில், பால் கொள்முதல் விலையை மட்டும் உயர்த்திவிட்டு, பால் விற்பனை விலையை உயர்த்தாமல் இருந்ததால், பால் கூட்டுறவு இணையம் மட்டும், 250 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கி வந்தது.

மாநிலத்தில், 31 மாவட்டங்களில், 17 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் உள்ளன. இவற்றில், கோவை, கன்னியாகுமரி ஒன்றியங்கள், தொடர்ந்து லாபத்தில் இயங்கி வருகின்றன. மற்ற 15 கூட்டுறவு ஒன்றியங்கள், 412 கோடி ரூபாய் நஷ்டத்தில்இயங்கின.விவசாயிகளிடம் கொள்முதல் செய்யும் பாலுக்கு, 45 நாட்கள் வரை பணம் கொடுக்க முடியாமல் இருந்தன.பால் விலை உயர்வு கடந்த 2009ம் ஆண்டுக்குப் பின், பாலின் விற்பனை விலை உயர்த்தப்படாமலே இருந்தது. இந்நிலை நீடித்தால், பால்கூட்டுறவு ஒன்றியங்கள் மூடப்படும் நிலைக்கு சென்றுவிடும். அரசு நிறுவனங்களான இவற்றின் நஷ்டத்தை ஈடு செய்ய வேண்டியது அரசின் கடமை என, பால் விற்பனை விலையை, முதல்வர் ஜெயலலிதா உயர்த்தினர்.

கடந்த ஆண்டு டிசம்பரிலிருந்து, பசும் பால் விலை லிட்டருக்கு, ஆறு ரூபாய், 25 காசும்; எருமைப் பால் விலை லிட்டருக்கு, இரண்டு ரூபாயும் உயர்த்தப்பட்டன. அதேபோல், பால் கொள்முதல் விலை லிட்டருக்கு, இரண்டு ரூபாய் உயர்த்தப் பட்டது.லாபம் அதிகரிப்பு அரசின் இந்த நடவடிக்கைக்குப் பின், பால் கூட்டுறவு இணையம், மாதத்துக்கு, நான்கு கோடி ரூபாய் லாபத்துக்கு வந்துள்ளது. இதேபோல், ஏற்கனவே லாபத்தில் இயங்கி வந்த, கோவை, கன்னியாகுமரி மாவட்ட ஒன்றியங்களைத் தவிர, 15 ஒன்றியங்களில், கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்ட ஒன்றியங்கள், இன்னும் நஷ்டத்திலிருந்து மீளாமல் உள்ளன. மற்ற 13 ஒன்றியங்கள், 4.20 கோடி ரூபாய் லாபத்தை, மாதந்தோறும் ஈட்டி வருகின்றன என, அதிகாரிகள் கூறுகின்றனர்.

லாபம் தொடரும் நிலையில், மாநில கூட்டுறவு இணையத்தின் நஷ்டம், 250 கோடி ரூபாய் குறைந்து, அடுத்த மூன்று ஆண்டுகளில் லாபத்துக்கு திரும்பும். அதேபோல், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின், 412 கோடி ரூபாய் நஷ்டம், அடுத்து மூன்று ஆண்டுகளில் குறைந்துவிடும் என்றும், பால் கூட்டுறவு ஒன்றியத்தின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.பால் கூட்டுறவு ஒன்றியங்கள் தற்போது, பால் உபபொருட்களாக பால்கோவா, மேங்கோ, பைனாப்பிள், கேரட் மில்க் ஷேக் போன்றவற்றை விற்பனைக்கு கொண்டு வந்துள்ளன. இவற்றுக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு இருப்பதால், இவற்றின் உற்பத்தியை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 20,2012,02:10 IST

கருத்தை பதிவு செய்ய

திருவள்ளூர் : விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், வரும், 24ம் தேதி நடக்கிறது.
திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், வரும், 24ம் தேதி செவ்வாய்

காலை, 11 மணியளவில், கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது.
கலெக்டர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு உள்ளிட்ட வேளாண் துறை சார்ந்த அலுவலர்கள், கலந்து கொண்டு விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.
இந்த வாய்ப்பினை மாவட்டத்தைச் சேர்ந்த, விவசாயிகள் பயன்படுத்தி கொள்ளுமாறு, கலெக்டர் ஆஷிஷ் சட்டர்ஜி கேட்டுக் கொண்டு உள்ளார்.

## கபிலர் விழாவில் வேளாண் அரங்கம்

பதிவு செய்த நாள் : ஜூலை 20,2012,01:53 IST

கருத்தை பதிவு செய்ய
திருக்கோவிலூர் : திருக்கோவிலூர் பண்பாட்டுக் கழகத்தின் கபிலர் விழாவில் நான்காம் நாள் நிகழ்ச்சியாக வேளாண் அரங்கம் நடந்தது.
திருக்கோவிலூர் சுப்ரமணிய மகால் திருமண மண்டபத்தில் நடந்த வேளாண் நிகழ்ச்சிக்கு பண்பாட்டுக்கழக தலைவர் தியாகராஜன் தலைமை தாங்கினார். "செய் சேர்ந்து கொள்' தலைப்பில் இயற்கை வேளாண்மை குறித்து சித்தர் பேசினார்.
மாலை 6 மணிக்கு சென்னை மதுரா டிராவல்ஸ் தலைவர் பாலனுக்கு "நாணயத்தின் மறு உருவம்' பட்டமும், அமுதசுரபி ஆசிரியர் திருப்பூர் கிருஷ்ணனுக்கு "எழுத்தின் சிகரம்' பட்டத்தையும் ஊரன் அடிகள் வழங்கி பாராட்டினார்.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் 24ம் தேதி சோளம் சாகுபடி பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூலை 20,2012,02:16 IST

கருத்தை பதிவு செய்ய
நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 24ம் தேதி மக்காச்சோளம், சோளம் சாகுபடி குறித்த உயர் தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 24ம் தேதி, மக்காச்சோளம், சோளம் மற்றும் சிறுதானிய பயிர் சாகுபடியில் உயர் தொழில்நுட்பம் என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது.பயிற்சியில், சிறுதானியப் பயிர் சாகுபடி முக்கியத்துவம், மண் பரிசோதனை, வீரிய ஒட்டு ரகம் உள்ளிட்ட பல்வேறு

தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பங்கேற்கலாம்.பயிற்சியில் பங்கேற்க விருப்புமுள்ளவகள், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும். 04286-266650, 266345, 266244 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பெயர் பதிவு செய்த கொள்ளலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கே.ஆர்.பி., அணை பகுதியில் நெல் சாகுபடி பாதிப்பு: மாற்று பயிருக்கு மாறும் விவசாயிகள்

பதிவு செய்த நாள் : ஜூலை 20,2012,01:31 IST

கருத்தை பதிவு செய்ய

கிருஷ்ணகிரி: பருவ மழை தாமதம் உள்பட பல்வேறு காரணங்களால், கே.ஆர்.பி., அணை பாசன பகுதியில், நெல் சாகுபடி செய்த விவசாயிகள், ராகி மற்றும் எண்ணெய் வித்துப்பயிர் சாகுபடிக்கு மாறியுள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், சம்பா பருவத்தில், 17 ஆயிரத்து, 500 ஹெக்டேரிலும், காரீப் பருவத்தில், 10 ஆயிரம் ஹெக்டேரிலும் ஆண்டுதோறும் நெல் சாகுபடி செய்யப்படும். இதன் மூலம் ஆண்டுக்கு, இரண்டு லட்சம் டன் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது.கே.ஆர்.பி., அணை பாசன பகுதியில் மட்டும், பத்து ஆயிரம் ஹெக்டேரில் இறவை மற்றும் சம்பா பருவத்தில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்தாண்டு தென்மேற்கு பருவமழை உரிய காலத்தில் பெய்ததால், ஜூன் 15ம் தேதி முதல் பட்ட நெல் சாகுபடிக்கு அணை நீர் திறந்து விடப்பட்டது.இந்தாண்டு பருவமழை பொய்த்து போனதாலும், கே.ஆர்.பி., அணையின் முக்கிய நீர்பிடிப்பு பகுதியான கர்நாடகா மாநிலத்தில் மழை இல்லாததாலும், அணைக்கு நீர் வரத்து தடைப்பட்டு இதுவரை முதல் போக சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடவில்லை. கிணற்று பாசனம் உள்ளவர்கள் மட்டும் நெல் நாற்றுவிட்டுள்ளனர்.

அணை நீரை நம்பியுள்ள விவசாயிகள் நிலத்தை உழுது வைத்து காத்திருந்தனர். வழக்கமாக ஆடி மாதம், 10ம் தேதி வரை நெல் நாற்றுவிட்டு நடவு செய்தால் பருவத்தில் நெல் விளைச்சல் நன்றாக இருக்கும். அதன் பின், நெல் சாகுபடி செய்தால் நெல் விளைச்சல் பாதிக்கும்.தற்போது, அணை பாசன பகுதியில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்கள் நிலத்தில் நெல்லுக்கு மாற்றாக ராகி மற்றும் எண்ணெய் வித்து பயிரான நிலக்கடலை மற்றும் சிறுதானிய பயிர்களான உளுந்து, காராமணி, பச்சை பயறு போன்வற்றை விதைத்து வருகின்றனர்.

அவதானபட்டி, பெரியமுத்தூர் பகுதியில் நெல்லுக்கு மாற்று பயிர் செய்யும் ஆயத்த பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். மேலும், கடை மடை பகுதிகளில் மல்லிகை, செண்டுமல்லி போன்ற பூச்செடிகளை நடவும் விவசாயிகள் நிலத்தை சமன்படுத்தி வருகின்றனர். இதனால், இந்தாண்டு

கே.ஆர்.பி., அணை பாசன பகுதியில் நெல் உற்பத்தி, 50 சதவீதம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

## உருளைக்கிழங்கு விளைச்சல் குறைந்தது

பதிவு செய்த நாள் : ஜூலை 20,2012,04:14 IST

கருத்தை பதிவு செய்ய

மேட்டுப்பாளையம்:நீலகிரி மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால், மேட்டுப்பாளையத்துக்கு உருளைக்கிழங்கின் வரத்து குறைந்துள்ளது; விலை அதிகரித்துள்ளது.மேட்டுப்பாளையம் காய்கறி மார்கெட்டிற்கு நீலகிரி மாவட்டம் மற்றும் கர்நாடகா, ஆக்ரா, கோல்கட்டா ஆகிய பகுதிகளில் இருந்து, உருளைக்கிழங்குகள் வருகின்றன.

இவை, தரம் பிரித்து தமிழகத்தின் பிற பகுதிகள், கேரளாவுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. தற்போது மேட்டுப்பாளையம் மார்க்கெட்டுக்கு ஊட்டி மற்றும் கோலார் உருளைகிழங்கின் வரத்து குறைந்திருப்பதால் விலை அதிகரித்துள்ளது. உருளைக்கிழங்கு வர்த்தக சபை துணைத் தலைவர் கோபால் கூறியதாவது:

மேட்டுப்பாளையத்திற்கு வரும் உருளைக்கிழங்குகள் பெரியது, சிறியது மற்றும் நடுத்தர கிழங்குகளாக பிரித்து, 45 கிலோ கொண்ட மூட்டையாக விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

நீலகிரி மாவட்டத்திலிருந்து தினசரி சராசரியாக 50 முதல் 60 லாரி லோடு உருளைகிழங்கு வரத்து இருக்கும்.
தற்போது, நீலகிரி மாவட்டத்தில் மழை குறைவால், கிழங்கு விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால்,நாள் ஒன்றுக்கு 20 லோடு மட்டும்தான் வருகிறது.

இதனால், மூட்டை ஒன்றுக்கு 700 ரூபாய் முதல் 900 ரூபாய் வரை, விற்பனையான கிழங்கு, தற்போது மூட்டை ஒன்றுக்கு 900 ரூபாய் முதல் 1,350 ரூபாய் வரை, விற்பனை செய்யப்படுகிறது.

இதேபோல், ஒரு மூட்டை கோலார் கிழங்கு, 800 ரூபாய் முதல் 900 ரூபாய் வரையும், ஆக்ரா கிழங்கு 700 ரூபாய் முதல் 750 ரூபாய் வரையும், கோல்கட்டா கிழங்கு, 700 ரூபாய் முதல் 750 ரூபாய் வரையும், ஜலந்தர் கிழங்கு 700 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இதனால், உருளைக்கிழங்கின் விலை அதிகரித்துள்ளது.இவ்வாறு, கோபால் தெரிவித்தார்.

**மழை எதிரொலி விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2012,23:38 IST

வேடசந்தூர்:வேடசந்தூரில் பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கடந்த சித்திரை மாதத்தில் பெய்த மழை யையடுத்து வேடசந்தூர் பகுதியில் உழவு செய்யப் பட்டது. ஆடி பிறந்ததும் மழை கொட்டியது. நேற்று இரவு வேடசந்தூர் தாலுகா அலுவலகத்தில் 20.8 மி.மீ., மத்திய புகையிலை ஆராய்ச்சி மையத்தில் 15.4 மி.மீ., குடகனாறு அழகா புரி அணையில் 24 மி.மீ., மழையும் பெய்தது. இம்மழை ஆடிப் பட்டத்துக்கு உகந்ததாக உள்ளது என விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

---

தினகரன்

விதை நெல் முறையாக வழங்க அரசுக்கு விவசாயிகள் வலியுறுத்தல்

பதிவு செய்த நேரம்:2012-07-19 12:09:49

செஞ்சி, :வல்லம் ஒன்றிய வேளாண்மை துறை அலுவலகத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை நெல் விற்பனை செய்து வருகின்றனர். இதில் பொன்னி நெல் 50 கிலோ மூட்டை ஒன்று ரூ.1500, மானியம் ரூ.250 போக ரூ.1250க்கு விற்பனை செய்கின்றனர். ஆனால் இதே நெல் மூட்டை செஞ்சி வேளாண்மை துறை அலுவலகத்தில் பொன்னி நெல் 50 கிலோ மூட்டை ஒன்று ரூ.950க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதனால் விவசாயிகள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவதை கண்டித்து முற்றுகை போராட்டம் நடத்தினர். மேலும் போதிய அளவு பொன்னி நெல் இல்லாததால் டோக்கன் மூலம் விற்பனை செய்கின்றனர். இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இது குறித்து வேளாண்மை உதவி விதை அலுவலர் கர்ணன், ரவி கூறியதாவது:

கடந்த ஒரு வாரமாக பொன்னி நெல்லுக்கு ரூ.10 மானியம் வழங்கி, 24 டன் நெல்லை விற்பனை செய்தோம். தற்போது போதிய அளவு விதை நெல் இல்லாததால் ரூ.5 மானியத்தில் விற்பனை செய்கிறோம். அடுத்த வாரம் மீண்டும் விதை நெல் வந்தவுடன் போதிய அளவு விதை நெல்

கிடைக்கும் என தெரிவித்தனர். தற்போது அரசு விவசாயிகளுக்கு விதை நெல் முறையாக வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தொடர் மழை விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நேரம்:2012-07-19 10:19:30

சூளகிரி, : சூளகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடியுடன் கூடிய மழை பெய்ய துவங்கியது. சுமார் அரை மணி நேரம் மழை நீடித்தது. சூளகிரி சுற்றுவட்டார பகுதிகளான பேரிகை, காளிங்காவரம், சென்னப்பள்ளி, உத்தனப்பள்ளி, காமன்தொட்டி, மருதாண்டப்பள்ளி, உலகம் உள்ளிட்ட பகுதிகளிலும் நல்ல மழை பெய்தது. இதனால் மழையை எதிர்பார்த்து விவசாய பணி களை துவங்காமல் இருந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். ஏர் உழும் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளனர். கடலை, துவரை, ராகி உள் ளிட்ட பயிர்களை பயிரிடும் பணிகளை துவங்கியுள்ளனர்.

## மழை பொய்த்ததால் அணை காய்கிறது 24 நாட்களுக்கு சிறுவாணி குடிநீர்

பதிவு செய்த நேரம்:2012-07-19 10:30:49

கோவை,: மழை பொய்த்து விட்டதால் சிறுவாணி அணை நீர்மட்டம் குறையும் வாய்ப்பு உருவாகியுள்ளது. இன்னும் 24 நாளுக்கு மட்டுமே குடிநீர் இருப்பு உள்ளது.

சிறுவாணி அணையின் மொத்த நீர் மட்ட உயரம் 15 மீட்டர். தற்போது அணையில் 2.40 மீட்டர் உயரத்திற்கு மட்டுமே தண்ணீர் இருப்பு இருக்கிறது. தென் மேற்கு பருவ மழை ஏமாற்றியதால் அணையின் நீர் மட்டம் குறைய துவங்கியுள்ளது. அணையின் நீர் மட்டம் தினமும் 10 முதல் 12செ.மீ வரை குறைய வாய்ப்புள்ளதாக தெரிகிறது. தற்போது அணையில் இருந்து தினமும் 8.3 கோடி லிட்டர் குடிநீர் பெறப்படுகிறது. மழை பெய்யாவிட்டால், இதே அளவிற்கு குடிநீர் எடுத்தால் அதிகபட்சமாக இன்னும் 24 நாட்களுக்கு மட்டுமே குடிநீர் பெற முடியும். மழை பெய்யாவிட்டால் அணை மூடப்படும் அவல நிலை ஏற்படும். அணையின் மொத்த நீர் தேக்க பகுதி 26.4 சதுர கி.மீ. இதில் 18.5 சதுர கி.மீ நீர் தேக்க பரப்பு நீரின்றி வறண்டு கிடக்கிறது. கடந்த ஏப்ரல் முதல் அணையின் நீர் மட்டம் 3 மீட்டர் உயரத்திற்குள் காணப்படுகிறது. கடந்த 15 ஆண்டுகளில் இதுபோன்ற வறட்சி நிலை ஏற்படவில்லை. கடந்த 2005, 2009ம் ஆண்டில் சிறுவாணி அணை ஒரு முறை கூட நிரம்பவில்லை. ஆனால், அப்போது கூட இந்தளவு அணை

வறட்சி நிலையில் இருக்கவில்லை. அணையில் குறைந்தபட்சம் 7 மீட்டர் உயரத்திற்கு நீர் தேக்கம் காணப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளாக தென்மேற்கு பருவ மழை காலத்தில் அணை நீர்மட்டம் உச்சத்தில் இருந்துள்ளது. 2001ம் ஆண்டில் இருந்து இதுவரை ஜூலை மாதத்தில் 7 முறை அணை நிரம்பி வழிந்துள்ளது.
ஆனால், நடப்பாண்டில் சிறுவாணி அணையில் கடும் வறட்சி நிலவுவதால் குடிநீர் வடிகால் வாரியத்தினர் அதிர்ச்சியடைந்துள்ளனர்.
பருவ மழை மீண்டும் பெய்யும் வாய்ப்பு அரிதாகவே இருக்கிறது. செப்டம்பர் மாதத்தில் தூறல் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக வானிலைத்துறை அறிவித்துள்ளது. செப்டம்பர் மாதத்துடன் தென்மேற்கு பருவ மழை சீசன் முடிந்து விடும். அடுத்த மாதம் வடகிழக்கு பருவ மழை துவங்கும். ஆனால் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் வடகிழக்கு பருவ மழை குறைவாகவே பெய்யும். நகரை ஒட்டியுள்ள பகுதியில் மட்டுமே மழை பெய்யும்.
நடப்பாண்டில் சிறுவாணி அணை குறைந்த பட்ச நீர் இருப்பு அளவை எட்டுவது சந்தேகமே. குறைந்தபட்ச நீர் இருப்பு இருந்தாலும் அடுத்த ஆண்டு பிப்ரவரி முதல் ஜூன் வரை கடும் குடிநீர் தட்டுபாடு ஏற்படும். மழை பெய்தால் மட்டுமே வறட்சியின் பிடியில் இருந்து சிறுவாணி அணையை மீட்க முடியும் என குடிநீர் வடிகால் வாரியத்தினர் தெரிவித்தனர்.

## நிலக்கடலை, மக்காச்சோளம் விலை முன் அறிவிப்பு

பதிவு செய்த நேரம்:2012-07-19 12:21:01

திண்டுக்கல், : தமிழ்நாடு வேளண்மை பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் சந்தை தகவல் மையம் விவசாயிகள் பயனடையும் பொருட்டு நிலக்கடலை

மற்றும் மக்காச்சோளம் பயிர்களுக்கான சந்தை நிலவரங்களை ஆய்வு செய்து அவற்றிற்கான விலையை முன் அறிவிப்பு செய்துள்ளது.
நிலக்கடலை: ஆடி பட்ட நிலக்கடலை முக்கிய விதைப்பு பருவங்களில் ஒன்றாகும். ஆடிப்பட்டத்தில் விதைப்பாகும் நிலக்கடலை அக்டோபர்-நவம்பர்

மாதங்களில் அறுவடைக்கு வரத்துவங்கும். எண்ணெய் பிரித்தெடுத்தல் நோக்கத்திற்காக நிலக்கடலை பருப்பிற்கு கிலோ ஒன்றிற்கு ரூ.46 முதல்

ரூ.48 வரை விலை கிடைக்க வாய்ப்புள்ளது. இந்த நிலவர அடிப்படையில் விவசாயிகள் நிலக்கடலையை பயிரிடலாம்.
மக்காச்சோளம்: தமிழகத்தில் குறைந்த மக்காச்சோள வரத்து காலமான ஏப்ரல் முதல் ஜூன்வரை பீகார் மாநிலத்தில் இருந்து வந்த அதிக வரத்தினால்

குவிண்டாலுக்கு விலை ரூ.ஆயிரத்து 200ஐ கடக்காமல் இருந்தது. கர்நாடகாவில் இருந்து ஆகஸ்ட் மாத இறுதியில் புதிய மக்காச்சோளம்

வரத்துவங்கும். அது வரை விலை குவிண்டாலுக்கு ரூ.ஆயி ரத்து 100 முதல் ரூ.1150 வரை இருக் கும். உடுமலைப்பேட் டை சந் தையில் கடந்த

18 ஆண் டுகள் நிலவிய மக்காச்சோள விலை ஆய்வு முடிவுகளின்படி ஆடிப்பட்ட பயிர் அறுவடை சமயம்(வரும் அக்டோபர்) குவிண்டாலுக்கு

ரூ.ஆயிரத்து 100 முதல் ரூ.1150 வரை விற்கும் என கணித்துள்ளது என, வேளாண்மை வணிக துணை இயக்குநர் சாரநாத்பாபு தெரிவித்துள் ளார்.

## தேன்கனிக்கோட்டை பகுதியில் தொடர் மழையால் உழவு பணி தீவிரம்

பதிவு செய்த நேரம்:2012-07-19 10:35:43

தேன்கனிக்கோட்டை,: தேன்கனிக்கோட்டை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெய்து வரும் மழையால் தடைபட்டிருந்த உழவுப்பணிகள் தீவிரமடைந்துள்ளன.

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை பகுதியில் பருவ மழை பெய்யாததால் பயிரிடப்பட்டிருந்த எள், அவரை பயிர்கள் கருகிவிட்டன. மேலும் நிலக்கடலை, ராகி உள்ளிட்ட பயிர்களை விதைக்க முடியாமல் விவசாயிகள் கவலையடைந்தனர்.
ஏரி குளங்களில் தண்ணீர் வற்றி தோட்டப்பயிர் சாகுபடியும் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக தேன்கனிக்கோட்டை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் மாலை மற்றும் இரவு நேரங்களில் மழை பெய்து வருகின்றது. இதனால் பாதிக்கப்பட்டிருந்த உழவு

பணிகள் தீவிரமடைந்துள்ளது. தற்போது ஆடிப்பட்டம் என்பதால், பெய்து வரும் மழைக்கு நிலக்கடலை விதைக்கும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு தேன்கனிக்கோட்டை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் நள்ளிரவு வரை அடை மழை பெய்தது.

இதில் தளியில் அதிகபட்சமாக 50 மிமீ மழை பதிவாகியுள்ளது.

அஞ்செட்டியில் 40 மிமீ, தேன்கனிக்கோட்டையில் 30மிமீ, ராயக்கோட்டையில் 11 மிமி மழை பதிவாகியுள்ளது.

தொடர்ந்து இதேபோல் மழை பெய்தால் வறண்டு கிடக்கும் ஏரி, குளங்களிலும் தண்ணீர் நிரம்பும் என விவசாயிகள் எதிர்பார்கின்றனர்.

## சூளகிரி பகுதியில் தொடர் மழை விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நேரம்:2012-07-19 10:35:30

சூளகிரி,: கிருஷ்ணகிரி மாவட்டம் முழு வதும் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இந்நிலையில் சூளகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடியுடன் கூடிய மழை பெய்ய துவங்கியது. சுமார் அரை மணி நேரம் மழை நீடித்தது.

சூளகிரி சுற்றுவட்டார பகுதிகளான பேரிகை, காளிங்காவரம், சென்னப்பள்ளி, உத்தனப்பள்ளி, காமன்தொட்டி, மருதாண்டப்பள்ளி, உலகம் உள்ளிட்ட பகுதிகளிலும் நல்ல மழை பெய்தது.

இதனால் மழையை எதிர்பார்த்து விவசாய பணி களை துவங்காமல் இருந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். ஏர் உழும் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

கடலை, துவரை, ராகி உள் ளிட்ட பயிர்களை பயிரிடும் பணிகளை துவங்கியுள்ளனர்.

இந்த மழையால் வெப்பம் தணிந்து, குளிர்ச்சியான சீதோஷ்ணம் நிலவியது.

**ஏப்ரல் மாதத்தில் 58,685 டன் நறுமண பொருள்கள் ஏற்றுமதி**

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*மும்பை*

*கடந்த ஏப்ரல் மாதத்தில் 58,685 டன் அளவிற்கு நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி ஆகியுள்ளன. இது, 2011 ஏப்ரல் மாதத்தில் 39,396 டன்னாக இருந்தது. ஆக, ஏற்றுமதி 49 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. வெளிநாடுகளில் ஏலக்காய், மிளகாய் மற்றும் பூண்டு ஆகிய நறுமணப் பொருள்களுக்கு தேவைப்பாடு அதிகரித்ததே இதற்கு முக்கிய காரணமாகும்.*

*பெரிய ஏலக்காய் ஏற்றுமதி மூன்று மடங்கிற்கு மேல் உயர்ந்து 100 டன்னை எட்டியுள்ளது. மிளகாய் ஏற்றுமதி இரண்டு மடங்கு அதிகரித்து 30,000 டன்னாக உயர்ந்துள்ளது. மஞ்சள் ஏற்றுமதி 1 சதவீதம் உயர்ந்து 7,300 டன்னாக உள்ளது. சீரகம் ஏற்றுமதி 6 சதவீதம் வளர்ச்சி கண்டு 2,500 டன்னாக அதிகரித்துள்ளது. நறுமண எண்ணெய் மற்றும் ஓலியோரெசின் ஏற்றுமதி 23 சதவீதம் அதிகரித்து 600 டன்னை எட்டியுள்ளது.*

*அதே சமயம் மிளகு ஏற்றுமதி 47 சதவீதம் சரிவடைந்து 1,200 டன்னாக உள்ளது. இந்திய மிளகு விலைஅதிகமாக உள்ள நிலையில் சர்வதேச சந்தையில் எழுந்த கடும் போட்டி காரணமாக மிளகு ஏற்றுமதி வீழ்ச்சி கண்டுள்ளதாக தெரிகிறது. நறுமணப் பொருள்கள் வாரியம் இந்த புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் 5.66 லட்சம் டன் அளவிற்கு நறுமணப் பொருள்களை ஏற்றுமதி செய்ய இவ்வாரியம் இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. சென்ற நிதி ஆண்டில் இது ஐந்து லட்சம் டன்னாக இருந்தது.*